செ.வெ.எண்:59 நாள்:23.11.2017

<u>பத்திரிக்கை செய்தி வெளியீடு</u>

**24.11.2017 மற்றும் 25.11.2017 அன்று நடைபெற உள்ள கறவைபசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறியாடுகளுக்கான "இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம்"**

தமிழக அரசால் 15.09.2011 அன்று துவங்கப்பட்ட விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்களில், தமிழகத்தில் வறுமைகோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக , ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வீதம் 31 மாவட்டங்களில் 7,70,539 பயனாளிகளுக்கு 30,82,156 வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகளும், தமிழகத்தில் மீண்டும் ஒரு வெண்மை புரட்சியை உருவாக்கும் வகையில் , 21 மாவட்டங்களில் , 67,322 பயனாளிகளுக்கு 67,322 கறவைப்பசுக்களும் 2011–12 முதல் 2017–18 முடிய உள்ள ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் மேற்படி திட்டங்கள் முழுமையாக முடிக்கப்பட்ட விபரம் கீழ் வருமாறு:

| வ. எண். | ஆண்டு | திட்டத்தின் பெயர் | குறியீடு | | சாதனை | |
|---|---|---|---|---|---|---|
| | | | பயனாளிகளின் எண்ணிக்கை | கால்நடைகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை |
| 1 | 2011-12 | விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டம் | **550** | **550** | **550** | **550** |
| | | விலையில்லா செம்மறி/வெள்ளாடு வழங்கும் திட்டம் | **4084** | **16336** | **4084** | **16336** |
| 2 | 2012-13 | விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டம் | **550** | **550** | **550** | **550** |
| | | விலையில்லா செம்மறி/வெள்ளாடு வழங்கும் திட்டம் | **6145** | **24580** | **6145** | **24580** |
| 3 | 2013-14 | விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டம் | **550** | **550** | **550** | **550** |
| | | விலையில்லா செம்மறி/வெள்ளாடு வழங்கும் திட்டம் | **5823** | **23292** | **5823** | **23292** |

| வ. எண். | ஆண்டு | திட்டத்தின் பெயர் | குறியீடு | | சாதனை | |
|---|---|---|---|---|---|---|
| | | | பயனாளிகளின் எண்ணிக்கை | கால்நடைகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை |
| 4 | 2014-15 | விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டம் | **600** | **600** | **600** | **600** |
| | | விலையில்லா செம்மறி/வெள்ளாடு வழங்கும் திட்டம் | **6216** | **24864** | **6216** | **24864** |
| 5 | 2015-16 | விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டம் | **450** | **450** | **450** | **450** |
| | | விலையில்லா செம்மறி/வெள்ளாடு வழங்கும் திட்டம் | **5763** | **23052** | **5763** | **23052** |
| 6 | 2016-17 | விலையில்லா செம்மறி/வெள்ளாடு வழங்கும் திட்டம் | **1012** | **4048** | **1012** | **4048** |
| 7 | 2017-18 | விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டம் | **100** | **100** | **100** | **100** |
| | | விலையில்லா செம்மறி/வெள்ளாடு வழங்கும் திட்டம் | **6175** | **24700** | **2031** | **8124** |

விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறிஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க வேண்டும் என அரசால் வலியுறுத்தப்பட்டுள்ளது. பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு மேற்படி ஆண்டுகளின் தமிழ் புத்தாண்டு தினத்தில் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தித் திறனை பெருக்கவும், வெள்ளாடுகள் / செம்மறிஆடுகளின் எடையினை அதிகரிக்கவும், தமிழகம் முழுவதும், 24.11.2017 மற்றும் 25.11.2017 ஆகிய நாட்களில் கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவப்பரிசோதனையும், வெள்ளாடு / செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது

விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கால்நடைகளுக்கான முகாம் **மானூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கருங்காடு கிராமத்தில்** மாவட்ட ஆட்சியாளர் அவர்களால் தொடங்கப்படும்.

| நாள் | ஊராட்சி |
|---|---|
| **24.11.2017** | கருங்காடு |

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**திருநெல்வேலி.**

வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்

திருநெல்வேலி